தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி 2019 நளி (30-11-1988) ஓர் உருபா (இதழ் எண்: 113)

கலைஞர் கருணாநிதிக்கே தமிழர்கள் ஆதரவு அளிக்க வேண்டும்!

கலைஞரை எதிரியாகக் கருதும் எவராலும் தமிழினத்திற்கு நன்மை நேராது!

கொடுமையான – சூழ்ச்சியான எதிரிகளை விட கலைஞர் எவ்வளவோ மேலானவர்!

பாவலரேறுவின் வெளிப்படையான வேண்டுகோள்!

வருகின்ற சட்டமன்றத் தேர்தல், இதுவரை நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வேறுபாடான ஒரு வகையைச் சார்ந்தது!

பெரும்பாலும் மக்களுக்கு உண்மையாக, நேர்மையாக, உழைப்பவர்களையே தேர்தலில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பது பொதுவான ஒரு நெறியே! ஆனால் அத்தகையவர்கள்தாம் தேர்தலில் நிற்பார்கள் என்று சொல்வதற்கில்லை. அதேபோல் இங்கு நடக்கின்ற தேர்தல்கள் எல்லாம் நேர்மையாக, உண்மையாக, அரசியல் சட்டத்திற்கு முரண்படாமல் நடைபெறுகின்றன என்றும் சொல்லிவிட முடியாது!

குடிநாயக அமைப்பில் தேர்தல் என்பது தவிர்க்க முடியாத — தவிர்க்கக் கூடாத — ஓர் அரசியல் அமைப்பு என்பதை முதற்கண் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நம்மில் சிலர் நேர்மையாகவும், உண்மையாகவும், சட்டத்திற்கு

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

மடல்: 5

மதுரை நடுவண் சிறை,
3-9-88.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு வணக்கங்கள். தாங்கள் சென்னையை விட்டுப் புறப்படும் முன் ஒரு மடல் போட்டிருந்தேன். அதைத் தாங்கள் பார்க்கவில்லை என் அம்மா எழுதியிருந்தார்கள். 5-ஆம் பக்கல் பெரும்பாலும் திரு. ஈகை, திரு. இளமுருகு இருவருக்கும் பிணையல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. 5-ஆம் பக்கல் வழக்கு மன்றச் செல்கை நாள். அன்றைக்குத் தொண்ணூறு நாள்கள் எவரெவருக்கு ஆகியுள்ளனவோ அவர்களுக்கு எல்லாம் பிணையல் கொடுத்து விடுவதாக நடுவர் கூறினர். அதன்படி, அவ்விருவருக்கே சட்டப்படி ஆகியுள்ளது. மற்றவருக்கு இன்னமும் ஒரு திங்கள் உள்ளது.

1-9-88 முதல் திரு. முகிலனுக்கும், எனக்கும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் (N.S.A) கீழ் ஓராண்டுச் சிறையடைப்புக்கான ஆணை நேற்று கிடைத்தது. ஏறத்தாழ 300 பக்கங்கள் கொண்ட பலரின் வாய்மூலங்கள் உள்ளடங்கிய அவ்வாணை எங்களின் கையொப்பங்களுக்குப் பின்னர் சிறை தணிக்கையாளரின் கையொப்பத்திற்குக் கொண்டு செல்லப் பெற்றுள்ளது. எங்களுக்கு ஒரு கிழமைக்குள் மீண்டும் கிடைத்துவிடும். கிடைத்தவுடன் ஒரு படியை அனுப்பி வைக்கிறோம். நிற்க. எங்களுக்கு N.S.A. போடுவதற்கே மிகுந்த தொல்லை எடுத்துக் கொண்டு, அவர்கள் செய்திருப்பது (போலியான பலரின் வாய்மூலங்கள் — உள் குளறுபடியான செய்திகளும் கொண்டதினால்) பெரும்பாலும் மற்றவர்களுக்குப் போட வாய்ப்பில்லை எனக் கருதுகிறோம். எனவே அவர்களைப் பிணையலில் விடலாம். அதற்கான முயற்சி செய்வது நலம்.

மற்றபடி N.S.A-விற்கு உரிய சிறப்பு உணவுகள் எங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஏராளமான ஈழப் போராளிகள் கையிழந்தும், காலிழந்தும், உடலின் பெரும் பகுதிகளை இழந்தும் உயிருடலங்களாய் மிகப் பொலிவுடனும், துணிவுடனும் கொள்கை உரத்தொடும் உள்ள நிலையில் இன்றைய கொடுநெறியாளனின் கொடுமையால் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடப்பதையும், அவர்களின் துடிப்பான இயங்கு நிலைகளையும் பார்க்கும் போது எம்மின் செயற்பாடுகள் ஒரு தூசானதே! விடுதலைப் போராட்டப் பாதையில் ஒரு தொடக்க நிலையே என்பதை எண்ணி வீறு கொள்கிறோம்

105, 106, 107, ஆம் எண்களுள்ள தமிழ்நிலம் இதழ்களைப் பார்த்தோம். சிறப்புடன் அமைந்திருந்தன. 108 கிடைக்கவில்லை. தங்களின் தலியான உழைப்பின் வெளிப்பாடுகளைக் கண்டு, மிகவும் நெஞ்சுருகினோம். இருப்பினும், இத் தமிழினம் உய்யும் நாள் வெகு தொலைவில் இல்லை. அதற்கெனத் தொடர்ந்து போராட யாம் தயங்குவதில்லை. எங்களுக்கு அளித்துள்ள சிறைக் காலங்களில் ஏதேனும் நாங்கள் பணி செய்வது சரியாக அமையும் எனத் தாங்கள் ஒதுக்கி, அதற்கான பணியைத் தெரிவிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். அது வல்லாமல் சில பணிகளை நாங்களே திட்டமிட்டுச் செய்ய எண்ணியுள்ளோம். 5-ஆம் பக்கல் வழக்கு மன்றம் சென்று வந்தபின் விரிவாக மடல் எழுதுகிறேன்.

அன்பு மகன்
பொழிலன்.

மடல்: 6

மதுரை நடுவண் சிறை,
5-9-88.

பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கம்.

3-ஆம் பக்கல் திரு. முருகவேள் அண்ணன், திரு. அன்பழகண்ணன், திரு. தென்னவன் மூவரும் வந்து பார்க்க வந்த பொழுது, என்னையும், முகிலனையும் பார்க்க இயலாமல் திரும்பியது அவர்களை எண்ணியும், அதுபற்றிய செய்திகளை எதிர்நோக்கியிருந்த நிலையில் இருந்ததையும், எண்ணிச் சற்று வருத்தப்பட்டோம். இருப்பினும், திரு. குணா, திரு. ஈகையார் இருவரையும் அவர்கள் பார்த்துத் திரும்பியது மிக்க மகிழ்வாக இருந்தது. அதன் பிறகு தலைமைக் காவலர் (Chief warder) வழி, சிறை மேலாளரையும், துணைக் கண்காணிப்பாளரையும் பார்த்து இசைவு கேட்டும் பயனில்லாமல் போய்விட்டது. அன்று காரிக் கிழமையாக இருந்தால் அரைநேரம்தான பார்வை நேரம் வேறு.

எங்களுக்கு 1-9-88 முதல் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் (N.S.A.) போட்டுள்ளனர். அதன்படி செவ்வாய், வெள்ளி இருநாள்கள்தாம் நேர்காணல் காண இயலும். N.S.A. போட்டதற்கான ஆணையும் அதற்கான சுவடியும் இரண்டு கொடுத்துள்ளனர். அனைத்து நிலைகளின் பதிவுச் சுவடி 261 பக்கங்கள் கொண்டது. பலரின் ஒப்புதல் வாய்மூலத்துடன், தட்டச்சு செய்யப் பெற்றும், கையால் எழுதப் பெற்றுப் படப்பதிவு செய்த தாளுமாக ஒரு தொகுப்பாக அந்நூல் உள்ளது. அதைத் தங்களிடம் விரைந்து அனுப்ப ஏற்பாடுகள் செய்து கொண்டுள்ளோம்.

இன்று வழக்கு மன்றம் செல்கிறோம். இனி, எங்களின் மடலகளும் மாநிலக் குற்றப் பிரிவினர் பார்வைக்குப் பின்னே எங்களுக்கும், எங்கும் அனுப்புவர். எனவே விரிவாக எழுத இயலாது.

... கூட்டங்கள் (நெல்லை - கொற்கைத் தமிழ் மன்றக் கூட்டங்கள்) சிறப்புற அமைந்திருக்கும் என நம்புகிறோம். முருகவேள் அண்ணன் செவ-

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உகந்த முறையிலும் தேர்தல் நடைபெறவில்லை என்பதால், தேர்தலையே புறக்கணிக்க வேண்டும் என்று கூறுவதை நாம் கேட்கிறோம். இப்பொழுதைய நிலையில், தேர்தல் என்ற நடைமுறை ஒன்றினால்தான் நாம் குடியரசு நாட்டில் இருப்பதாகவே உணரமுடிகிறது. இந்திய அரசியலைத் தலைமை தாங்கி நடத்துபவர்கள் பெரும் பெரும் முதலாளிகளும் பார்ப்பனர்களும ஊழல் பேர்வழிகளுந்தாம் வன்பதை எவரும் மறுக்க முடியாது. இந்நிலையில் இங்கு நடைபெறும் தேர்தல் எவ்வகையிலும் உண்மையாகவோ நேர்மையாகவோ சட்டத்திற்கு உகந்த முறையிலோ நடைபெறவே இயலாது; அவ்வாறு நடைபெறவும் முடியாது. ஆனால், அதற்காக நாம் தேர்தலைப் புறக்கணிக்கவும் கூடாது. அவ்வாறு புறக்கணிப்பதால் நாம் நினைக்கின்ற எந்த நன்மையும் நடந்துவிடப் போவதுமில்லை. மாறாக, மேலும் மேலும் தீமைகளும் ஊழல்களும் எவ்வகை எதிர்ப்புமின்றி நன்கு செழித்து வளரவே செய்யும்.

இந்திய நாட்டுக்குள்ளிருந்தே — இந்திய சட்டத்திற்குட்பட்டே நாம் எப்படி கோரிக்கைகளைக் கேட்பதும், போராட்டங்களை நடத்துவதுமாக இருக்கின்றோமோ, அப்படியோ நாம் தேர்தலை எதிர்கொண்டேதான் அதன் நடைமுறைகளை மாற்றியமைக்க வேண்டும். அதுதான் குடியாளுமை முறையும் கூட. தேர்தல் ஊழல் நிறைந்தது, பொதுமக்கள் நலனுக்கு உகவாதது என்றெல்லாம் நாம் மட்டும் உணர்ந்தால் — பேசினால் போதாது. பொது மக்களும் அதை நன்கு உணர்தல் வேண்டும். அதற்காகப் போராட முன் வருதல் வேண்டும். தேர்தல் நடைபெற்றால்தான். அதில் உள்ள ஊழல்களையும் சட்டப்புறம்பான செயல்களையும் பொது மக்கள் நன்கு உணர முடியும். உணர்ந்தால்தான் போராட முன்வர முடியும். ஒரு செயல் நடைபெற்றால்தான் அதிலுள்ள நன்மை தீமைகளை நாம் உணர முடியும். மக்களுக்கும் உணர்த்த முடியும். தேர்தலே நடைபெறாமல் அதிலுள்ள ஊழல்கள், தில்லு முல்லுகள் முதலியவற்றைப் பொதுமக்கள் உணர்வது எப்படி? எனவே தேர்தலும் நடைபெற வேண்டும். அதில் நாமும் ஈடுபட வேண்டும், அதைப் புறக்கணிப்பது என்பது பொருளற்றது; தேவையற்றது.

இனி, நடைபெறும் தேர்தலில், நிற்கின்ற கட்சிகளோ, ஆள்களோ எல்லாம் நம்மிடையில் இருந்து உட்டுவானவர்கள்தாம்! அவர்கள் அனைவருமே தூய்மையானவர்களாக, நேர்மையானவர்களாக, உண்மை யானவர்களாக, ஒழுக்கம் நிறைந்தவர்களாக, மக்கள் நலம் கருதுபவர்களாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இந்நாட்டைப் போலத்தான் இங்குள்ளவர்களும் இருப்பார்கள்! அவர்கள் மட்டும் வேறெங்கிருந்தோ வந்து விட முடியாது. அவர்கள் நாம் விரும்பத்தகாதவர்களாகவும் இருக்கலாம்; நாம் வெறுக்கின்றவர்களாகவும் இருக்கலாம். ஆனாலும், அவர்களுக்கிடையில்தான், அஃதாவது முழுவதும் நேர்மையில்லாமல், ஊழல் நிறைந்தவர்களாக, தந்நலமுள்ளவர்களாக உள்ளவர்களிடத்தில்தான், கொஞ்சம் நேர்மையானவர்களை, சிறிது உண்மையானவர்களை, ஓரளவு ஊழல் நிறைந்தவர்களை, ஓரளவு தந்நலமுள்ளவர்களை — நாம் தேர்ந்தெடுத்தாகல் வேண்டும். அவர்களை முற்றிலும் நாம் ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது. முற்றிலும் ஏற்கமுடிந்தவர்களாக இருப்பார்கள் அல்லது இருக்க வேண்டும என்று இலக்கணம் பாடி விடவும் முடியாது. எரிகிற கொள்ளியில்தான் எந்தக் கொள்ளி ஒரு மாதிரியான கொள்ளி என்றும், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளுள்தான், ஓரளவு நல்ல மட்டை எதுவென்றும் தேர்ந்தாக வேண்டும். அவ்வாறு தேறவும், தேறியவர்களைத் திருத்திக் கொண்டு போகவுமாக இருந்துதான், காலப்போக்கில், ஒரு படிநிலை வளர்ச்சியில், நல்ல ஓர் ஆட்சி மாந்தரை நாம் உருவாக்கியாகல் வேண்டும். அப்படிக் கில்லாமல் இங்கிருப்பவர்கள் அனைவருமே சொத்தை, கொள்ளை, அ’து இ’து என்று சொல்லி, அனைவரையுமே தள்ளி விட்டு விட்டுத் திருக்குறளில் கூறுகின்ற அரசியல் இலக்கணங்களுக்குரிய மாந்தரை அளந்து பார்த்துத் தேடிக் கொண்டு போனால், இந்த நாட்டில், இன்றைக்கு மட்டுமன்று, என்றைக்குமே தூய தெய்வ வடிவினராக, இறக்க(அவதார)ப் பிறவியாக ஒருவரும் நம் கணிப்பான் கண்களுக்குக் கிடைக்கவே மாட்டார்.

எனவே, இருப்பதில்தான் நாம் எது கொஞ்சம் தாழ்விலை, கொஞ்சம் சரி, ஓரளவு பொருத்தம் என்று பார்த்துத் தேர்தலை நாம் நடத்தி, நல்ல ஓர் ஆட்சியாளரை அல்லது ஆளுங் கட்சியை நாம் பொறுக்கியாகல் வேண்டும்.

இருக்கின்ற நிலையைப் பார்த்தால், இங்குள்ள அனைத்துக் கட்சிகளும் பொறுக்கித் தின்னும் கட்சிகள்தாம். அனைத்துத் தலைவர்களுமே ஊழல் நிறைந்து, உண்மையற்றவர்கள்தாம்! எல்லாருமே பொதுமக்களை ஏமாற்றிச் சுரண்டி ஏய்த்துப் பிழைப்பவர்கள்தாம். அவர்களில் நல்லவர் — வெல்லம் போட்டவர் — என்று எந்தக் கொம்பனையும், இங்குள்ள எந்தக் கொம்பனும் சுட்டிச் சொல்லி விட முடியாது.

ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், இக்கால் உள்ள மானங்கெட்ட, மதிக்குறைந்த, இழிநிலை அடிமைத் தமிழ் மக்களுக்கு, அவர்களைக் கட்டிக் காக்கும், அவர்களின் மொழி, இன, நாட்டு நலன்களை மேம்படுத்தும் ஒருவர் நமக்கு வேண்டும் என்பதை முதலில் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். இஃதன்றி, வடநாட்டார்க்கும், பார்ப்பனிய வாணிகர்களுக்கும் நம்மை, நம் மொழியை,

Scanned with CamScanner

நம் இனத்தை, நம் தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுக்கும், கூட்டிக் கொடுக்கும் கயவர்களுக்கு நாம் ஆதரவளித்து விடக் கூடாது. இதுபற்றி நாம் முழு எச்சரிக்கையாக இருந்தாகல் வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு தனி நாடானுல் தவிர, தமிழர்க்கு, இன்றுள்ள அரசியல், பொருளியல், குமுகவியல் அடிமைத்தனங்களும், இழிவுகளும், பூசல்களும், சாதி, சமய வேறுபாடு களும், அறவே விலகி விடமுடியாது என்பதுடன், தமிழர்கள் எல்லா நிலைகளிலும் முன்னேறவும் முடியாது என்பதே நம் அசைக்க முடியாத கொள்கையு மாகும்; குறிக்கோளும் ஆகும். ஆனுல், இந்தக் கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் உகந்த ஒரு வரை, ஒத்த ஒருவரை நாம் எங்கும் தேடிக் கண்டு பிடிக்க முடியாது. அப்படி ஒருவரைத் தேடிக் கண்டு பிடித்தாலும் அவரைத் தேர்தலில் நிற்க வைத்து வெற்றி பெறச் செய்து விட முடியாது. அதற்கான பொருள் குவியல்கள், இப்பொழுதுள்ள அரசியல் தலைவர்களைத் தவிர, வேறு எந்த நேர்மை யாளனிடமும் இல்லை; ஒருவேளை இருந்தாலும் அவன், அரசியல் தில்லுமுல்லுகள், அரம்பத்தனங்கள் இவற்றை உணர்ந்தவனுக இருக்க முடியாது.

எனவே, இன்றுள்ள காலநிலையில், அரசியல் சிலம்பம் ஆடத் தெரிந்தவனும்,அந்த ஆடுகளத்தில் வெற்றி வாகை சூடத் தெரிந்தவனும், நேர்மை யாளனுக,உண்மையுள்ளவனுக, ஒழுக்கமுள்ளவனுக, மக்கள நலம் கருதுபவனுக இருக்கவே முடியாது. அப்படிப் பட்டவர்கள் இன்று அரசியலில் மட்டு மன்று, வேறு எந்தத் துறையிலுமே இல்லை. எனவே, அவ்வாறுன ஒருவனைத் தேடி அலைந்து கண்டு பிடிக்கும் காலத்திற்குள், இந்தத் தேர்தலும் வந்து, இன்னும் பலதேர்தல்களும் வந்து போய்த் கொண்டே இருக்கும்.

ஆகவே, இருக்கின்றவர்களுக்குள், நம் கொள்கைக்கு முழுவதும் நெருங்கியவர்களையன்று, ஓரளவு நெருங்கியவர்களையேனும் கண்டு பிடித்து, அவர்களுக்கு நம் முழு ஆதரவையும் அளிப்பதையே, இன்றுள்ள நம கடமையாக நாம் கருதிக் கொள்ளுதல் வேண்டும். அல்லாக்கால் நாமும் தேர் தலைப் புறக்கணித்தவர்களாகவே கருதப்பட்டு விடுவோம் என்பது உறுதியிலும் உறுதியாகும்.

அவ்வாறு பார்க்கையில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், பெரியார் அமைத்துத் தந்த தேர்தல் இலக்கண முறையைத் தலைமைக் கோட் பாடாகக் கொண்டு பார்த்தால், இங்குள்ள பார்ப்பனர் அனைவரும் வெறுக்கின்ற ஒருவரையே நாம் முதலில் ஆதரிக்க வேண்டும். அவர் தி. மு க. தலைவர் கலைஞர் **கருணுநிதியே!** அடுத்து, அவரின் கடந்தகால அரசியல் நடைமுறைகள் முழுவதுமே, நாம் வரவேற்கக் கூடியனவாக இல்லாமல் இருக்கலாம். ஆனுல், அதற்காக அவரின் தமிழின ஈடுபாட்டை, இத்தமிழினத்தின் மேல் அவர் கொண்ட அன்பை, ஆர்வத்தை, அக்கறையை எவரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அதே போல் அவரின தமிழ்ப் பற்றையும் யாரும் எளிதே மதிப்பிட்டு விடமுடியாது. அவரின் தமிழ் நாட்டுப்பற்றுரவமும் எவரினும் குறைந்ததன்று. இத்தனைக்கும் மேலாக அவர் இத் தமிழ் நாட்டு மக்களின் முன்னேற்றத் திற்கென, இராப்பகல் சிந்தித்தவராக - சிந்தித்துக் கொண்டே இருப்பவராக - செயல் பட்டுக்கொண்டே இருப்பவராக இருப்பதை வேறெவரையும் விட நாம் நன்கு உணர்வோம். அதையெண்ணி அவர் நமக்கும், நாம் அவருக்கும் மிகச் சேய்மையில் இருந்தாலும், அவரை மதிக்க நாமும் நம்மை மதிக்க அவரும் என்றுமே தவறியதில்லை. இனி, இதையெல்லாம் அடியொற்றியன்று, நாம் அவரை ஆதரிக்கச் சொல்லுவது. அவரின் உழைப்பு, அவரின் விடாமுயற்சி, அவரின ஊக்கம், அவரின் நிலைகுலையாமை, நெஞ்சுறுதி, எதிரியை எதிர்த்துப் போராடும் வன்திறன், மக்களை மதிக்கும் அன்புணர்வு, தமிழினத்தின் மேல் அவர் கொண்ட அளவிலாப் பற்று, இவற்றுல் இவ்வினத்திற்கு அவர் செய்ய விரும்பும் — இன்னுஞ் சொன்னுல் துடிக்கும் - பல்வகையான விடுவிப்பு நலன்கள் — இவற்றை யெல்லாம் ஆழவும், சூழவும் எண்ணியே நாம் இக் கருத்துகளை வெளிப்படுத்துகிறோம்.

எனவே, அவரை, நம்மைச் சார்ந்த இனவுணர் வாளர்கள் போல் மக்கட்குத் தங்களை வெளிப்படுத் திக் கொண்டிருக்கும நம திரவிடக் கட்சியினரே அறிந்தோ அறியாமலோ வெறுத்தாலும் பகைத்தா லும் கூடஉண்மைத் தமிழர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டிருக்கும் அத்தனை உள்ளங்களும் கலைஞரைத் தவிர வேறெவரையும் கருதிப்பார்ப்பது, நம் இனத்தையே வேரறுக்கும் அல்லது கருவறுக்கும் முயற்சி என்று அதனை மதிப்பிட்டுக் கொள்க என்று எச்சரிக்கிறோம். 0

வெளிவந்துவிட்டது !

'பாவலரேறு' அவர்களின்

செயலும் செயல்திறனும்

அரிய வாழ்வியல் நூல்!

424 பக்கங்கள் விலை 35 உருபா

பதிவுக் கொடுப்பு (Recorded Delivery) அஞ்சலில் பெற

விரும்புவோர் 40 உருபா அனுப்புக!

தென்மொழி, சென்னை-5.

உருசியாவின் பிற்போக்குத்தனம்.

சோவியத்து உருசியா பல துறைகளில் மிக முன்னேறிய நாடு என்று பறைசாற்றப் பெறுகிறது. மக்களின் தேவைகளை மிக உணர்ந்து, அவற்றை அறிவியல் முறைப்படியும், மிகச் சரியான திட்டங்களின் படியும் பல வகையிலும் நிறைவேற்றித் தன்னிறைவு பெற்று விட்டது என்று பெருமையாகக் கூறப் பெறுகிறது. ஆனால் மிக அண்மைக் காலத்தில் அது பார்ப்பனியக் கோட்பாடுகளை வெளிப்படையாகப் பின்பற்றி வருவது, அது மிக மிகப் பிற்போக்குத்தனம் அடைந்து வருகிறது என்பதையே நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

உருசியா வரலாற்று அடிப்படையில் ஆரியர்களின் மூதாதையர்களுக்கு இருப்பிடமானது என்பதைப் பலர் உணராமல் இருக்கலாம். செயவர்த்தனே எவ்வாறு இந்திரா காந்தியின் மூக்கையும், தம்முடைய மூக்கையும் பொருத்திக் காட்டியும், தம் முன்னோர் இந்தியாவில் பீகார், வங்காளப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைவூட்டியும் தாங்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர் என்று கூறினாரோ* அவ்வாறே, கடந்த காலத்தில், மொரார்சி தேசாய் ஒரு முறை நடுவணரசு அமைச்சராக விருந்த பொழுது, குருசேவ் உருசியாவின் தலைமைப் பொறுப்பில் இருந்தார்; அங்கு சென்ற தேசாய், குருசேவிடம், "உங்கள் முன்னோரும் எங்கள் முன்னோரும் ஒன்றாக இங்குதான் வாழ்ந்திருந்தார்கள்" என்பதாக இனமுறை உறவைச் சுட்டிப் பேசியுள்ளார். எனவே ஆரியர்கள் என்னும் முறையில் உருசியரும், இங்குள்ள ஆரியப் பார்ப்பனரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிறார்கள். இந்த உறவு முறையாலேயே, நேரு வித்திட்ட உருசிய — இந்திய ஆரிய இணைப்புறவு, பின்னர் இந்திரா காந்தியால் மிகவும் வளர்க்கப் பெற்று, இன்று இராசீவ் காந்தியால் மேலும் வலுப்படுத்தப் பெற்று வருகிறது.

உருசியர்கள் இப்பொழுது இந்துமதக் கோட்பாடுகளில் மிகுந்த கருத்துச் செலுத்துகின்றனர். இராசாசி எழுதிய இராமாயண, மகாபாரதக் கதை நூல்கள் இலக்கக் கணக்கான படிகள் அங்கு அச்சிடப் பெற்று விற்கப் பெற்றுள்ளன, பார்ப்பன இனத்தில் பிறந்து விட்டதாலேயே 'மகாகவி' என்று வெறும் வாயளவில் போற்றப்படும் பாரதியாரை உருசியாகள் இந்தியப் பார்ப்பனர்கள் கொண்டாடப்படும் அளவு கொண்டாடுகின்றனர். பார்ப்பனர்கள், ஆர். எசு. எசு. க்காரர்கள், இந்து மதச் 'சாமி' யார்கள் அடிக்கடி உருசியா போய் வருவதும் அங்கு நீண்ட நாள்கள் தங்கியிருப்பதும் அதிகரித்து வருகிறது. பகவத்கீதை உருசியனில் மொழி பெயர்க்கப் பெற்றுப் பல இலக்கம் படிகள் அங்கு விற்கப் பெற்றுள்ளன. உருசியாவில் பாரதி நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பார்ப்பன எழுத்தாளர்களான தீபம் பார்த்தசாரதி, மணியன், கல்கி, கி. இராசேந்திரன், சிவசங்கரி, இந்திரா பார்த்தசாரதி ஆகியோர் நூல்களும், பார்ப்பனச் சார்பாகக் கதைகள் எழுதிவரும் செயகாந்தன் முதலியோர் நூல்களும் அங்கு ஏராளமாக மொழிபெயர்க்கப் பெற்று விற்பனையாகின்றன.

1984 அக்டோபரில் 1,2 — ஆம் பக்கல்களில் மாசுகோவில் நடந்த உலக அமைதிக் கூட்டத்தில் இந்தியாவிலிருந்து சென்ற இந்து மதச் சாமியார்கள் உலக அமைதிக்காக உருசியா மேற்கொண்ட, கொள்ளுகிற முயற்சிகளைப் பாராட்டியதுடன் அமையாது அமெரிக்காவையும் கண்டித்துள்ளனர். அத்துடனும் நில்லாது, உருசியத் தலைவர்களுக்கு அறிவுரையாக, "நிலையான அனைத்துலக் அமைதிக்கு ஒரே வழி இந்துமதக் கொள்கையான ஆன்மீகத்தைக் கடைப்பிடிப்பதே ஆகும். எனவே உருசியத் தலைவர்கள் உருசியாவில் இந்து மதத்தின் ஆன்மீகக் கொள்கையைப் பரப்புவதற்கு முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்." என்று கூறியிருக்கிறார்கள். இந்த அறிவுரையைக் கேட்டு, அங்குள்ள உருசியத்தலைவர்கள் எந்த ஒரு விடையையும் சொல்லாதது, அவர்கள் இந்துமதப் புரட்டல் கோட்பாட்டுக்கு எந்த அளவில் செவி சாய்க்கக் காத்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதே இடத்தில் இன்னொரு நிகழ்ச்சியையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரீகன் உருசியாவுக்குப் போய் அங்குள்ள மேனிலைத் தலைவர்களுடன் அணுக்கருவிக் கொள்கைத் தொடர்பாகப் பேச்சுரை நிகழ்த்தினர். அக்கால் நடந்த ஒரு கூட்டத்தில், 'உருசிய மக்களுக்கு எல்லா நிலைகளிலும் முழுவுரிமை தரவேண்டும், அதற்கு இறைவனை நான் வேண்டிக் கொள்கிறேன்' என்று தம் கடவுள் நம்பிக்கைக் கோட்பாட்டுக்கு

* "The sinhalese are the desandants of the ancient Aryans who migrated from the north India to Srilanka during 6th or 5th Century B. C" — History of Ceylon

கி. மு. 483-இல் விசயன் என்னும் இளவரசன் பீகார், வங்காளப் பகுதியிலிருந்து இலங்கையின் தென்பகுதியில் வந்து குடியேறினன்.

— மகாவமிசம்.

ஒத்தவாறு தம் கருத்தைக் கூறினார். அக்கால் அவர் பேச்சு பல வகையிலும் பகடி செய்யப்பட்டுத் திறனாய்வு செய்யப்பட்டது.

உணர்வளவில் ரீகன் கூறிய கருத்துக்கும், அந்த இந்துமதச் 'சாமி'யார்கள் சொன்ன ஆன்மீக மதிப்புண்டு. ஆனால் அதை ஓர் எதிரிநாட்டு, அமெரிக்கர் சொல்கிற போது, அதைத் திறனாய்வும் பகடியும் செய்யுமளவிற்கு, உருசியாவின் மார்க்சியக் கொள்கையின் உணர்வு அத்தலைவர்களுக்கு மேலோங்கியிருந்தது; இந்துமதத் தலைவர்கள் அதே வகையான ஒரு கருத்தைச் சொல்லும் பொழுது அது முனை மழுங்கிவிட்டது.

இந்த இரண்டு நிலைகளில் எது சரி என்பதை இப்பொழுது நாம் ஆராயத் தேவையில்லை. ஒரே உணர்வு இரண்டு வகையான கோணங்களில் எவ்வாறு செயல் பட்டிருக்கிறது, அதற்கு என்ன காரணம், என்பதை மட்டும் நாம் இவ்விடத்தில் ஆய்ந்தால் போதுமானது.

இந் நிகழ்ச்சிகளால் நாம் என்ன முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது என்றால், படிப்படியாக உருசியா இந்துமதப் பதியப் பாத்தியாக மாறிவருகிறது என்பதற்குத் தான். நிலைமை இப்படியே போனால், காலப்போக்கில் இலெனினையும் மார்க்சையும் உருசியா படிப்படியாகக் கை நெகிழ விட்டு இந்து மதச் சங்கராச்சாரிகளையும், பழைய முனி புங்கவர்களையும் போற்றுதல் செய்யலாம். அல்லது அதே மார்க்சையும், இலெனினையும் கடவுளின் திரு விறக்கங்கள் (அவதாரங்கள்) என்று கொண்டாடினாலும் கொண்டாடலாம் — என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கிறது.

இந்த முடிவுக்கு அத்துணை எளிதாக நாம் வந்துவிடவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. இரண்டு, ஆண்டுகளுக்கு முன் ஆரிய வேதங்களில் உள்ள பாடல்களின் உருசிய மொழி பெயர்ப்பு ஒன்று உருசியாவில் வெளியிடப் பெற்றது. அவை உரைநடையில்லாமல் பாட்டு வடிவிலேயே இருந்தது. மாசுகோவில் உள்ள 'குதோ செசுத் வென்ஞயா லித்ரதுரா' என்னும் நூல்வெளியீட்டகம் அந் நூலை வெளியிட்டிருந்தது. இந்த வேதப்பாடல்களின் தொகுப்புக்கு அவ் வெளியீட்டகம் தந்திருந்த தலைப்பு **"விண்ணுக்கும் மண்ணுக்கும் என் குரல் கேட்கட்டும்"** என்பதாகும். ரிக் வேதத்திலிருந்தும் அதர்வ வேதத்திலிருந்தும் பாடல்கள் இதில் சேர்க்கப்பட்டு உள்ளன. இதற்கொரு விளக்கவுரையும் அதில் எழுதப்பட்டு உள்ளது. "பழைய இந்தியா வடக்கு-ஆசியா, மற்றும் ஆசியா-மைனர் ஆகிய பகுதிகளின் வரலாறுகளை ஆராயும் அறிஞர்களுக்கு மட்டுமன்றி, இந்தோ - ஐரோப்பியக் கலை, பண்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி அறிஞர்களுக்கும் மதிப்பு வாய்ந்த செய்திகளை வேதப் பாடல்கள் அளிப்பதாக" என முன்னுரையில் கூறப்பெற்றுள்ளது. இதில் மேலும் விளக்கமாக, வேத இலக்கியங்களுக்கும், உருசியக் கதை இலக்கியங்களுக்கும் உள்ள ஒற்றுமைகள் உள்ளதாகத் திறனாயப் பெற்றுள்ளது. வேதத்தில் வரும் **த்ரிதாவுக்கும்**, உருசியக் கதைகளில் வரும் **இவான் த்ரிதே** உறுப்பினர்க்கும் இடையே உள்ள ஒற்றுமையை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கூறப்பெற்றுள்ளது.

பண்டைய ஆரியர்கள் காகசசு வழியாகவும், நடு ஆசியா வழியாகவும் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும் என்ற கருத்தை உருசிய வரலாற்றாசிரியர்கள் ஒப்புகின்றனர். கிரிமியா மற்றும் குமான் நிலப் பகுதிகளில் உள்ள இடங்களின் பெயர்கள் இந்திய மூலச் சொற்களிலிருந்து தோன்றியவை என்பதையும், ஆரியர்களின் மொழி அஃதாவது, அவர்களின் வேதமொழி உள்ளிட்ட சமசுகிருதம், பண்டைய இந்தியக் கலை, பண்பாட்டையும், பண்டைய உருசியக் கலை, பண்பாடுகள் உள்பட்ட ஐரோப்பியக் கலை, பண்பாட்டையும் இணைக்கும் ஓர் அமைப்பாக உள்ளது என்பதையும் உருசிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆரியர்கள் நடு ஆசியப் பகுதியிலிருந்து வந்ததும் அவர்களின் கலை, பண்பாடுகள் உருசியக் கலை, பண்பாடுகளுடன் ஒத்திருப்பதுமாக அவர்கள் குறிப்பிடுவது உண்மையேனும், அவர்கள் மொழிக் கூறுகள் பல உருசியச் சொற்களின் மூலங்களாக அமைந்திருப்பதாக அவர்கள் கூறுவது உண்மையில்லை. அதற்குக் காரணம் அவர்கள் சமசுக்கிருதத்திற்கு அறிந்தோ அறியாமலோ முதல் மதிப்புக் கொடுத்திருப்பதும், சமசுக்கிருத அளவில் கீழைத் திரவிட மொழிகளையும் அவற்றுக்கும் மூலமும் ஆகிய தமிழ்மொழியையும் இன்னும் நன்றாக ஆராயாமல் இருப்பதுமே ஆகும். அதனால் உருசியம், சமசுக்கிருதம், சீனம், எபிரேயம், கிரேக்கம், இலத்தீனம் போன்ற அனைத்து ஆசிய, ஐரோப்பிய மொழிகளுக்குமே தமிழ் மூலமும் முதலுமாக உள்ளதை உலகம் இன்னும் ஓரளவேனும் உணராமலேயே உள்ளது. அதற்குக் காரணம், ஆரியர்கள மொழிநிலையிலும் இன நிலையிலும் ஆட்சி நிலையிலும் சூழ்ச்சி நிலையிலும் இந்தியாவில் தங்களை மேன்மைப் படுத்திக் கொண்டது போலவே, உலக நிலையிலும் தங்களை அனைத்து நிலைகளிலும் உயர்த்திக் கொண்டதும், தமிழர்கள் தங்களிடம் இன ஒற்றுமையின்மையாலும், தமிழ அரசர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பூசல்களாலும், மேற்கூறிய அனைத்து நிலைகளிலும் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டதும் ஆகும்.

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

அன்பர்களுக்கு ஒரு துயரச் செய்தி!

தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்கள் விரைவில் நிறுத்தப்படும்!

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களைத் தொடர்ந்து நடத்துவதில் உள்ள செயல் நிலை, பொருள் நிலை, இடர்ப்பாடுகளைப் பற்றியும், என் தனிப்பட்ட பணிநிலை அழுத்தங்கள், துன்ப, துயரங்கள் பலவற்றையும் பற்றியும், நான் மனந்திறந்து பல முறை என் கருத்துகளையும் உள்ள உயிருணர்வுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றேன்.

கடந்த முப்பதாண்டுகளாக இம் முயற்சியிலேயே என் உடல், உள்ளம், அறிவு, வாழ்க்கை, குடும்பம் அனைத்தும் நலிந்தும், நசிந்தும் போய்விட்டன. ஏறத்தாழ என் இளமை வாழ்நாளில் மூன்றில் இரண்டுபங்கை இதிலேயே செலவு செய்து விட்டேன். இப்பொழுதுள்ள தமிழினத்தை நோக்கி, அதன் மிடி நீக்கத்தையும் விடிவு ஆக்கத்தையும் எண்ணியும், அவற்றுக்கான செலவழிக்கப்பட்ட என் வாழ்க்கைக் காலம், அரும் பொருள், நெஞ்சவுணர்வுகள், ஏற்பட்ட விளைவுகள் முதலிய அனைத்தையும் கணக்கிட்டுப் பார்க்கையில், எனக்குக் கிடைக்கும் விடை என் அறிவுக்கு நிறைவு தருவதாயில்லை.

எனவே, இனிமேலும், எனக்கு இயற்கையால் கொடுக்கப்பட்ட ஆற்றல்கள், வான் நோக்கி எய்யும் அம்புகளாக, வீணாய்ப் போய்க் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. இனி, எஞ்சியுள்ள அவற்றை அறிவாக்கத்திற்கும் எதிர்காலத் தமிழினத்திற்கும் முழுவதுமாகப் பயன்படுத்தி, நிறைவுடன் இவ் வாழ்வை முடித்துக் கொள்வது என்று எண்ணங் கொண்டு விட்டேன்.

ஆனால் இவ்வெண்ணத்தை முடிவான செயலாகச் செய்வதற்கு இன்னும் நான்கு மாத இடைவெளியை இடையீடாகக் கருதியுள்ளேன்.

அதற்குப் பின்னர், இக்கால் வெளிவந்து கொண்டிருக்கும் மூன்று இதழ்களும் கட்டாயம் நிறுத்தப்படும்!

இவற்றை நிறுத்தக் கூடாது, நிறுத்த வேண்டாம் என்று கருத்துக் கூறவோ, கட்டளையிடவோ, பக்கம் பக்கமாக மடல்கள் எழுதவோ யாரும் முன்வர வேண்டாம். ஏனெனில், அந்த முடிவை நான் சட்டென்று எடுத்து விடவில்லை. தீவிரமான, நடுநிலையான விருப்பு வெறுப்பற்ற, தெளிவான மனநிலை, அறிவுநிலை ஆய்வுகளுக்குப் பின்னரே அம்முடிவுக்கு நான் வந்துள்ளேன். ஆனாலும், இத்துணைக்காலம் நான் பழகியிருந்த, அன்பு சார்ந்த, தமிழின நாட்டம் கொண்ட தூய உள்ளங்களுக்காக வரைமுறை ஒன்றை வகுத்துள்ளேன். இந்த நிலைகளையெல்லாம் மிகவும் விளக்கி நீண்ட உணர்வு வெளிப்பாடுகளாக உங்கள் முன் வைக்க நான் விரும்பவில்லை. இருப்பினும் நான் மதிக்கின்ற அன்புள்ளங்கள், இவ்விதழ்கள் நிறுத்தப்படுவது குறித்துப் பதைபதைத்து விதிர்விதிர்ப்புற்று ஓரிரு கருத்துகளையோ வேண்டுகோளையோ எனக்குத் தெரிவிக்க விரும்பினால், அவர்கள் எனக்கெழுத விரும்பும் மடலில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பத்துப் பத்து உருபா கணக்கிட்டு, அதற்கான வரைவோலையை (Draft) அம்மடலுடன் வைத்து அனுப்பட்டும். அவ்வாறு வரைவோலையில்லாத எந்த மடலும் என்னால் படிக்கப் பெறாமல் (உறுதியாகப் படிக்கப் பெறாமல்) அவர்களுக்கே அஞ்சல்தலை ஒட்டாமல் திருப்பி அனுப்பப் பெறும்.

அவ்வாறு, அனுப்பப் பெறும் மடல் தொகை வரும் 10-3-1989 முடிய உருபா ஓர் இலக்கத்தை (உரு: 1,00,000) எட்டினால் மட்டுமே, இந்தக் கருத்தை நான் மறு ஆய்வு செய்ய முடியும். அத்தொகைக்கு ஒரே ஓர் உருபா குறையினும், அவ்வாறு அனுப்பப் பெற்ற மடல்களுடன் வந்த அனைத்து வரைவோலைகளும் அனுப்பிய அன்பர்களுக்கே மீண்டும் திருப்பி அனுப்பப் பெறுவதுடன், 12-3-89-இல் தொடங்கி அச்சிட்டு அம்மாத இறுதிக்குள் அனுப்பப் பெறும் இறுதி இதழ்களுடன் என் முடிவான அறிக்கையும் வெளியாகும். இம் முடிவை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. (அவ்வாறு எண்ணுகிற எவரேனும் இருந்தால்.)

மற்றபடி இது பற்றி எவரும் என்னிடம் நேரில் வந்து கருத்துக் கூறுவதை நான் விரும்பவில்லை.

அனைத்து முயற்சிகளும் முடிந்து விட்டன. எனவே என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள்!

அன்புநிறை



சென்னை.5 17-11-88

பின் குறிப்பு: இறுதியாகத் **தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு** ஆகிய இம் மூவிதழ்களிலும் ஆண்டாண்டுக் காலமாக ஏறத்தாழ பதினாறாயிரம் உருபாக்களை நிலுவையாக வைத்து, இம்முடிவுக்கே முதல் காரணமாக இருக்கும் முகவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

-ஈழம் மெய்ம்மையே-

-- வள்ளிகேள்வன் --

பொய்யுரைப்பவர் புன்மைமிக்கவர்,
போலிநாடகம் ஆள்பவர்,
கைதவம்மிக வானொலி, தொலைக்
காட்சியால்முர ணுகியே
மெய்மறைப்பவர் வீணிலேபழி
வீசிடும் கொலை காரர்கள்,
எய்யும் அம்பிலும் இந்திவெறியினை
ஏற்றும் வடவராம் தீயரே.

நயனுரைப்பவர் போலவந்தனர்;
நரியினும்கொடு வஞ்சமாய்
கயமைசெய்தனர்; கோழைசிங்களக்
காடையர்க்குநட் பாயினர்!
இயல்பிலேஅமை திப்படைஎனக்
கூறிஈழம்வாழ் மாந்தரை
வெயில்மணற்புழு போலவாட்டினர்,
வெறிகொள்இந்திய வடவரே.

நஞ்சைஉண்டுநம் மறவர்மாய்ந்தனர்;
நாய்களோமகிழ்ந் தாடினர்!
அஞ்சிடாமலே திலிபன் மாண்டனன்;
அதையுமேபுறம் பேசினர்!
வஞ்சிமார்களும் நோன்பு பூண்டுநல்
உயிரை மாய்த்தனர். வடவரோ
வெஞ்சொல் பேசிஎக் காளமிட்டனர்,
ஊமர் போலநாம் காணவே!

சிங்களன்உடன் பாடுமீறியே
தீமைசெய்வதைக் காண்கினும்
தங்கள் நண்பனைத் தழுவிக்கொண்டனர்
தகைமையேபுரிந் தேத்தினர்!
வெங்களத்தினில் ஈழவிடுதலை
வீரப்புலிகளைத் தாக்கியே
பொங்குமாங்கடல் போலெதிர்த்துவீண்
பழிகள்பூசினர் வடவரே!

அமைதிசெய்படை என்றுகூறினர்;
அழிவுசெய்படை அல்லவோ?
தமர்கள் போல்வர்யாம் என்றுசொல்லியே
தலையறுப்பவர் அல்லவோ?
தமிழஈழமே மீளும்வேளையில்
தடைவளர்த்தவர் அல்லவோ?
கமைதுறந்தவர் கயமைமிக்கவர்
காண்கதில்லியாள் வடவரே!

நாகமாகநின் றேகடிப்பவர்
ஞாயம்செய்வதும் கூடுமோ?
ஈகமேசெயும் ஈழவிடுதலைப்
புலிகளைமதிப் பார்களோ?
வேகும்நெஞ்சிலே வேலைவீசிடும்
வெறியராயினர் வடவரே!
ஆகும்நாள்தொலை யாயினும்தமிழ்
ஈழம்காண்பது மெய்ம்மையே!

யாழகத்திலே மக்கள்யாவரும்
ஈழப்புலிகளின் பக்கமே
வாழும்வீடுநீள் காட்டகம், மனம்
மாழைபோல்ஒளி சிந்துமே!
தாழுகின்றஅக் கீழ்க்குணம்தமிழ்
மானமுள்ளவர்க் கில்லைகாண்
ஈழம்மீளும்அக் காலமேவரை
எதிருவோம்அது கடமையே! 0

(-6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, உருசியர்கள் இன நிலையில் தங்களைச் சார்ந்தவர்கள் என்பதை முன்வைத்து,இந்தியாவில் உள்ள ஆரியப் பார்ப்பனர்கள்,அரசியல் நிலையிலும் அவர்களைப் பயன்படுத்தித் தங்கள் ஆட்சி நிலையை மேன்மேலும் வலுப்படுத்தி வருகிறார்கள் என்பது மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் நடந்து வரும் ஒரு செய்தியாகும். இதன் பொருட்டாகவே 'இந்திய சோவியத்து நட்புறவுக் கழகம்' முதலிய கலை, இலக்கிய, பண்பாட்டுக் கழகங்கள் தோன்றலாயின. ஏற்கனவே அ ர சி ய ல் முறையிலான, பார்ப்பனர்களையே தலைவர்களாகக் கொண்ட இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகள் அரசியல் நிலையில் இந்தியாவிற்கும் உருசியாவிற்கும் ஆரியப் பார்ப்பனீய வல்லாண்மைப் பரிமாற்றத்தை ஏற்படுத்தி வருவதைக் கூர்மையான அரசியல் நோக்கங்கள் பலவகையிலும் உணர்ந்து இருக்கிறார்கள்.

எனவே, இவ்விருவகைத் தொடர்பு நிலைகளிலும் இந்தியாவில் ஆரியம் அழுத்தமான நிலைப்பாடு கொள்வதற்கு உருசியா பலவகையிலும் பலவாறான கோணங்களில் உ த வு கி ன் ற அதே பொழுது, ஆரியத்தால் அது தன் தனித் தன்மைகளையும் இழந்து வருவதை அண்மைக்காலச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும கூர்ந்து நோக்குவார் உணர்ந்து கொள்வர். இல்லெனில் இலெனினை முழு மூடன் (பரம மூடம்) என்று சொல்லாமற் சொன்ன-பொதுவுடைமைக் கொள்கையைப் பழித்தும் இழித்தும் கூறிய - பாரதியாரை (அவரின் 'செல்வம்' என்னும் கட்டுரையைக் காண்க) இங்குள்ள பச்சைப் பார்ப்பனப் பொதுவுடைமைத் தலைவர்கள்தாம் தம் இனவுணர்வின் அடிப்படையில் பாராட்டிக் கூறுகிறார்கள் என்றால்,உருசியாவிலும் அவர் விழாவைக் கொண்டாடு வார்களா?

பொதுவுடைமைக் கொள்கையில் உருசியா கொஞ்சம் கொஞ்சமாகத் தற்சார்பு இழந்து வருவதை நாம் உணர்கிறோம். ஆனால் அதே வேளையில் அது, அதற்கு இயல்பாகவுளள மக்களியல் நோக்கில் பிற்போக்கு அடைந்து, மூட நம்பிக்கைகளையும், மதப் போலித் தனங்களையும் வளர்த்தெடுக்கும் ஆரியத்தின் ஆடுகளமாகி வருகிறதே. அஃது எப்படி? ஏன்? சிந்திக்க வேண்டும் உண்மையான மார்க்சிய, இலெனினிய, மாவோயியச் சிந்தனையாளர்கள். சிந்திப்பார்களா?

0

வல்லரசியங்களும் தேசிய இனப் போராட்டங்களும்!

இன்றைய உலகம் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இன்றைய உலக அரசியல் அரசு — அரசுகள் என்னும் முறைமையினுள்ளே அடங்கி நிற்கின்றது. இன்றைய அரசியல் ஆடுகளத்தில் தீர்மானிக்கும் ஆற்றல்களாக அமெரிக்க மற்றும் உருசிய வல்லரசுகளே மேல்நிலையை ஏற்று வருகின்றன. இவற்றின் கைப் பாவைகளாகவே துணை வல்லரசுகளும், பிற தேசிய அரசுகளும் இருக்கின்றன. அத்தகைய துணை வல்லரசுகளில் இந்திய வல்லரசும் ஒன்று.

இந்திய வல்லரசு உலகத்தின் நடுவில், தெற்காசியப் பகுதியில், இந்தியப் பெருங்கடல் பகுதியின் ஒரு முகாமையான இடத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியே உலக வல்லரசுகளின் சம வலிமைப் போட்டியைத் தீர்மானிக்கும் பகுதியாகவும் இருந்து வருகிறது. உலக அரசியல் அரங்கம் மேற் கூறிய வாறு அமைந்துள்ளதால், இந்தியப் பகுதிகளில் எழும் சிக்கல்களுக்கும், போராட்டங்களுக்கும் தீர்வை அளிக்கக் கூடியவையாகவும் இருந்து வரு பவை மேற்கூறிய இரு — அமெரிக்க, உருசிய — மேல் நிலை வல்லரசுகளுமே ஆகும். இதற்கான அண்மைக் காலத்திய எடுத்துக்காட்டே இந்திய — இலங்கை உடன்பாடும், தமிழீழத் தமிழ் மக்கள் மீது இந்திய வல்லரசு தொடுத்துள்ள போரும் ஆகும்.

இன்றைய நிலையில் இப்போரால் பயனடைந்துள்ளவை மேற்கூறிய இரு மேல்நிலை வல்லரசுகளுமே ஆகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தால் இலங்கையின் ஒரு பகுதியில் துடைத்தெறியப்பட விருந்த அமெரிக்காவினுடைய இலங்கைச் சந்தையினூடான நலன்கள் இப்போரால் நிலை நிறுத்தப் பட்டுள்ளது. உருசிய வல்லரசிற்கோ இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்காவிற்கு எதிரான தனது சம நிலை (balance) வலிமையைப் சரிப்படுத்திக் கொள்ள இப்போர் உதவியுள்ளது.

மேலும், இப்போர் இந்தியத் தில்லி துணை வல்லரசு தனது புதிய குடியேற்ற (நவ காலனித்துவ) ஆட்சியை இலங்கையில் நிறுவ வழிவகைகளைச் செய்து வருகிறது. இவ்வாறு வல்லரசுகளின் பங்கீடு தலையீட்டினால் உலக அரங்கில் தமிழீழ தேசிய இன மக்களுக்குள்ள தன்னுறுதி (சுய-நிர்ணய) உரிமை பறித்தெடுக்கப் பட்டுள்ளதுடன், இப்போரால் ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமை வல்லரசுகளின் கையில் சிக்கியுள்ளது. இவ்வாறு ஈழத் தமிழ் மக்களின் மீது ஒரு போரைத் திணித்து இந்தியத் துணை வல்லரசு உலக மேல் நிலை வல்லரசுகளுக்குக் கைகட்டிப் பணிபுரிந்து வருகின்றது.

இந்தியா ஆங்கில வந்தேறிகளால் பிணைத்துக் கட்டப்பட்ட பல தேசிய இனங்களுடைய ஒரு சிறைக் கூடமாகும். எனவே இந்திய அரசு என்பது பல தேசங்களையும், தேசிய இனங்களையும் வலியப் பிணைத்துக் கட்டியாளும் ஒரு வல்லரசு என்பதை பொதுமையர் எவரும் மறுக்க இயலாது. அதனால் அதனுள் அடங்கி வாழும், — பிணைக்கப் பட்டுள்ள தேசிய இனங்களின் — மக்கள் இந்திய வல்லரசுக்கெதிராக எழுந்து போராடுவதும் தவிர்க்க இயலாததாகும். மேலும் அது வரலாற்றின் போக்குமாகும். அவ்வகையில் எழுந்த இந்திய எதிர்ப்பு இயக்கங்களெல்லாம் இன்றைய அளவில் வல்லரசுகளினால் சீரழிக்கப்பட்டு, அவற்றின் கைகளுக்குள் — கொடிய பிடிக்குள் — அடங்கி நிற்கின்றன.

இந்தியத் தில்லி வல்லரசை (பிணைப்புகளின் முடிச்சு) எதிர்த்தெழுந்த தமிழக மக்களின் போராட்டம் திராவிட இனவெறியர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்டு விட்டது. பஞ்சாபிய மக்களின் போராட்டம் படிப்படியாக சீக்கிய மத அடிப்படையிலான போராட்டமாகத் திரிக்கப்பட்டு விட்டது. அசாமில் எழுந்த மக்கள் போராட்டம் வங்காளியர் எதிர்ப்புப் போராட்டமாக திரிக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்டுள்ளது. நாகா, திரிபுரா பழங்குடி மக்களிடையே எழுந்த தன்னுரிமை போராட்டங்களோ சீனத்தின் கைப்பாவைகளாகிச் சீரழிகின்றன. கூர்க்கர்களின் போராட்டமோ தன்னுரிமை என்பதிலிருந்து மேற்கு வங்க மக்கள் எதிர்ப்பாக உருமாற்றப் பட்டு வருகின்றது. முதலாளியத் தலைமைகளைக் கொண்டே இம் மக்கள் போராட்டங்கள் வல்லரசுகளினால் இவ்வாறு மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்தியாவில் வாழும் பொதுமையர்களின் கடமை என்னவாக இருக்க வேண்டும். இந்திய வல்லரசை — தில்லியரசை — எதிர்த்தெழும் போராட்டங்களுக்கு மார்க்சிய — அனைத்துலகிய உள்ளடக்கத்தினை அளித்து, உலக முதலாளியத்தை, வல்லரசியத்தை எதிர்த்த போராட்டங்களாக, உருப்பெறச் செய்வதுவே ஆகும். ஆனால் இந்தியப் பொதுமை—யர்களோ அத்தகைய தமது புரட்சிக் கடமையிலிருந்து பிறழ்ந்து தேர்தல் நேரத்துக்குத் தக்கப்படியான கருத்துகளிலும் (சந்தர்ப்ப வாதத்திலும்). 'இந்திய தேசிய(?) ஒருமைப்பாடு' முதலாளியக் கோட்பாட்டிலும் (வல்லரசு நிலைப்புக் கோட்பாடு) மூழ்கித் திளைக்கும் போலிப் பொதுவுடைமையர்களாகவே புரட்சிப் பட்டங் கட்டிக்கொண்டு உலா வருகின்றனர். இப்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாய்க் வருவதாய்க் கூறினாராம். அவரிடம் மேலும் செய்திகள் தெரிந்து கொள்கிறேன். பெரும்பாலும் N.S.A. வேறு யாருக்காவது கூட போட்டிருக்கலாம் - என எண்ணுகிறோம். என்னுடைய N.S.A. எண் C-NO: 1/87 என்றும், முகிலனுக்கு C-NO: 3/87 — என்றும் வரிசை கொடுத்திருக்கிறார்கள். எனவே எண்: 2-ஐ வேறு இது தொடர்புடைய ஒருவருக்குக் கொடுத்திருக்க வேண்டும். சென்னையில் யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. N.S.A. போட்ட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தம் அறிக்கையில்,

"முதல் தாக்கல் அறிக்கையில் பொது ஒழுங்கு பராமரிப்புக்குக் குந்தகம் விளைவிக்கப்பட்டது தெளிவாகக் காணப்படவில்லை. ஆனால் எதிரிகள் பொது ஒழுங்குப் பராமரிப்புக்குக் குந்தகமான முறையில் செயல் புரிந்துள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்தப் போதுமான அடிப்படைகள் இருக்கின்றன என்று நான் கருதுகின்றேன்" — என்று எழுதியுள்ளார்.

மற்றபடி செய்திகளைப் பிறகு எழுதுகிறேன்.

அன்பு மகன் பொழிலன்.

அன்பு அம்மா, எங்களுக்கு N.S.A. போட்ட செய்தியை அப்பா அவர்கள் சொல்லக் கேட்டிருப்பீர்கள். நாங்கள் எதிர்பார்த்ததுதான். அதனால் எங்களை அதிகம் தாக்கவில்லை. நீங்கள் அதுபற்றிச் சிறிதும் வருத்தப்பட வேண்டாம். நாங்கள் மிகவும் தென்போடு உள்ளோம். முன்னை விட இக்கால் நல்ல முறையில் உணவுகளைக் கொடுக்கின்றனர்.

காலையில் சப்பாத்தி (அ) கோதுமைத் தோசை (அ) பொங்கல் — என மாறி மாறி வருகிறது. அதற்கு மணிலாச்சட்டினி(அ) தேங்காய்ச் சட்டினி; பகல் சோறு, சிறப்புக் குழம்பு, சாறு, தயிர்; இரவு உணவு, சிறப்புக்குழம்பு, சாறு. கிழமையில் 3-நாள் புலால் குழம்பு — இப்படித் தருகிறார்கள். எனவே எங்கள் நலம் பற்றிச் சிறிதும் கவலைப்பட வேண்டாம்.

இங்கு மதுரைச் சிறையில் மட்டும் ஏறத்தாழ 60-க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளைச் சிறையில் அடைத்துள்ளனர். அவர்களில் கையிழந்தும் காலிழந்தும், இடுப்புச் செயலிழந்து நடக்க முடியாமலும், கால் செயலிழந்து நொண்டிச் செல்பவர் — நடக்க முடியாதவர்களைத் தூக்கிச் செல்வதும், அவர்களை அன்பொழுகக் குளிப்பாட்டுவதும், உடை மாற்றி விடுவதும் ஆகிய எந்தமிழ்ப் பேரின மக்களின் அவ் வீர உணர்வினைக் கண்டு, எங்களின் உள்ளங்களும் எழுச்சி கொள்ளவே செய்கின்றன. அத் தமிழிளைஞர்களின் அகவைகளும் இருபதுக்குள்ளாகவே உள்ளன. அப்படிபட்ட அவர்களைக் கூட இங்கு N.S A -வில்தான் போட்டுள்ளார்கள். ஒரு விடுதலைப் போராட்டம் என்பது அந்த அளவு எளிமையானது அன்று. ஏராளமான இளைஞர்களின் — மக்களின் உணர்வுகளை, உழைப்புகளை, உடல்களை உட்கொண்டே அது கிடைக்கும். அவற்றை ஈகம் செய்கிற அளவிலான உணர்வுகள் நம் தமிழகத்தில் இன்னும் தோன்றவில்லை. படிப்படியாகத் தோன்றும். அதை எப்படிபட்ட அடக்குமுறைகள் கொண்டும் அடக்கி விட முடியாது. அதற்குக் காலம் தள்ளலாமே யொழிய நடந்தே தீரும். இது வாலாற்றின் கட்டாயம்!

எனவே, இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில், தங்களை ஈகப்படுத்திக் கொண்டு, ஒரு பெரும் திரளெனத் திரண்டு பணியாற்றுகிற உணர்வு கொள்ள வேண்டும். அப்பாவின் பாடலில் உள்ளது போல் 'தமிழே எனக்கு உயிர்,உடலம், மூச்சாக உள்ளதாய்' எண்ணி, மாந்தன் ஒவ்வொருவனும் பாடாற்ற வேண்டும். எந்தக் காலம், என அறிந்தவர் ஏங்குவது — தங்களையும் ஈடுபடுத்தத் தயங்குவதாகவே உள்ளது. அப்படிப் பட்ட தயக்க உணர்வுள்ள தந்நலப் பித்தர்களே கடந்தகாலத் **தென்மொழி** இயக்கத்தில் பெரும் பங்கு அப்பிக் கிடந்தனர். திரு.........னர் இன்று ......மாவட்ட த.மு.மு.வின் தலைவராய் நின்று வாழ்ந்து கொண்டுள்ளார். எனவே நீங்கள் எதுபற்றியும் கவலைப்பட வேண்டாம். உண்மையில் மக்கள் நலனுக்காகப் பாடுபடுகிற நாமே உண்மையான மக்கள் பற்றாளர்கள்— புரட்சியாளர்கள் என்பது தெளிவு அம் மகிழ்ச்சியே மகிழ்ச்சி! அவ் வாழ்வே வாழ்வு! அதுவே உணவு! அதுவே எழுச்சி! அதுவே உயிர்! அதுவே படலம் — என்று எண்ணுங்கள். தென்போடு இருங்கள்! உங்கள் மகன் அப்படிப் பட்டவனாகவே என்றும் இருக்க எண்ணுங்கள்! வாழ்த்துங்கள். பிறகு எழுதுகிறேன்.

— பொழிலன்.

விடுதலை உள்ளத்தை வாழ்த்தி ஒரு மடல்!

நெஞ்சுரம்மிக்க செந்தமிழ்ப் பாவல,

கொஞ்சுதமிழ்ப் புகழ்பாடும் இந்நூற்றுண்டுக் கம்ப நாட!! அஞ்சாத அடலேற்றுப பெரும் புலவ!!

அய்யா அவர்கட்கு அன்பு வணக்கங்கள் பல; தம்பி — பொழிலனின் அறிவார்ந்த மடல்கள் கண்டேன். மகிழ்வு கொண்டேன்; அஞ்சாத அரிமா வாய், கொள்கைத் துணிவுகொண்ட உரவோனாய் விளங்குதல் கண்டு இறுமாந்தேன்!

உங்கள் பணியை — எதிர்காலத்தில், தொய்வின்றித் தொடர்ந்துசெய்ய — தமிழன்னை ஒரு தவப்புதல்வனைப் பெற்றெடுத்துள்ளான் — என்ற அரிய செய்தியறிந்து உளம் மகிழ்ந்தேன்!

அய்யா அவர்களே! முன்னிலும் பன்மடங்கு — வேகத்துடனும், மனத்தெம்புடனும், தங்களது

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணியைத் தொடருங்கள்; பாதை மாருமல், பயணத்தையும் தொடருங்கள்!

நீங்கள் ஊதுகின்ற சங்கால் உறுதியாய் இத் தமிழ்நிலம் விடிவடையும்! எழுச்சி பெற்ற தமிழர்கள் எழுந்து நிற்கும் காலம் விரைவில் வந்தெய்தும்! அவ்வாறு அவர்கள் மீசை முறுக்குங்கால், தங்களது கொள்கைப்பாடலில் தாங்கள் குறிப்பிடுவது போல, 'எதிர்நிற்க' எவரும் இருக்க மாட்டார்.

இன்றைய இந்திய அரசியல்காரர்கள் அனைவரும், 'ஆட்டோ' சங்கரைப் போன்றவர்களே! தில்லி, திகார்சிறையிலிருந்து தப்பியோடிய சோப்ராசை ஒத்த அனைத்து உலகக் குற்றவாளிகளே! இவர்களெல்லாம், 'என்ன', அல்லது 'எதை'க் கிழித்துக் கேழ்வரகு நட்டுவிடப் போகின்ருர்கள்?! இழிந்த மயிரைக் கூட இவர்களாலே பிடுங்கி கீழே போட முடியாது.

இதோ! உங்கள் கொள்கைகளைத் தூக்கிப்பிடிக்கவும் — உங்கள் வழியில் பயணம் செய்யவும், இந்தத் தமிழ்க் குமுகாய விடியலுக்குப் பண்பாடவும், ஓர் இளம் அரிமாவாய் — கொள்கைக் குன்ருய்த் தம்பி **பொழிலன்** கிடைத்து விட்டான்!!

இந்த மகிழ்வில் — மனத்தை நிறைத்து — சோர்வின்றிப் பணியாற்றுக! வெற்றி நமதே!!

உமது உயர்ந்த கொள்கைகளால், உறுதியாய் இத் தமிழ்கூறும் நல்லுலகம் சூழப்பெறும் நாள் மிக அருகில் உள்ளது!!

பறம்பையார் தங்களை மயிலாப்பூர் இல்லத்தில் சந்தித்து மீண்டதாயும், விரிவு, நேரிலென்றும் மடல் தீட்டியிருந்தார்கள்! விரைவாய் நேரில் சந்திப்பேன். அன்பின்மகிழ்வில் தங்களன்புத்தம்பி,

— **தமிழ்க்கனல்.** தஞ்சை-4.

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் — பல முறை பலவகையிலும் நினைவூட்டி எழுதிய அன்பான — வேண்டுகோளான — கண்டிப்பான மடல்கள் விடுத்தும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் வைத்துள்ள — பட்டியல் நிலுவைத் தொகைகளை உடனே விடுத்துவிட்டு, ஏதோ சில சூழ்நிலைகளால் அன்றி, பொதுநலம் கருதுபவர்கள்தாம் நீங்கள் என்பதை, இவ்விறுதி வேண்டுகோளைப் பார்த்தாகிலும் விடுத்து விடுங்கள். இல்லெனில், இவ்வறிக்கையின் படி இறுதியாக வெளிடப்பெறும் மூன்று இதழ்களிலும், **இம் முடிவுக்கு மூல காரணமானவர்கள் நீங்கள்** என்னும் தலைப்பில் தங்கள் பெயர்கள் முகவரிகளுடனும் நீங்கள் தரவேண்டிய நிலுவைத் தொகைகளுடனும், வெளியிடப் பெறும் என்பதை அன்புடனும் எச்சரிக்கையுடனும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

— **ஆசிரியர்.**

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போலிகளிலிருந்து மாறுபட்டு நிற்கும் புரட்சிகரப்(?)பொதுமையர் சிலரோ இந்திய வல்லரசை - தில்லியரசை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் இந்தியச் சிறையில் பிணைக்கப்பட்டுள்ள தேசங்களுக்கும், தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகும் தன்னுறுதி (சுய நிர்ணய) உரிமையை வலியுறுத்தும், அதற்காகத் தேசிய விடுதலைப் போரை மேற்கொள்ளும் இலெனினியப் புரட்சி உத்தியினைப் புறந்தள்ளி விட்டு இந்தியா ஒரு தேசம் என 'அறைகூவல்' விடுக்கின்றனர். இவ்வாறு இந்தியப் பொதுவுடைமையர்கள் போலிகளாகவும், வரட்டியர்களாகவும் சீரழிந்து நிற்கின்றனர்.

இந்நிலையில் தமிழகப் பொதுமையர்களின் கடமை என்ன?

நாம் வல்லரசுக் காலவழியில் வாழ்ந்து கொண்டு வருகின்ரோம். வல்லரசியம் உலக முதலாளியத்தின் உச்சக் கட்டமாகும். வல்லரசியம் தேசங்களையும், தேசிய இனங்களையும் ஒடுக்குவதற்காக முதலாளியம் தகவமைத்துக் கொண்டுள்ள முதன்மையான பெரிய கருவியாகும். பாட்டாளிய வகுப்பு அனைத்துலகியத்திற்காக உலக முதலாளியத்தை எதிர்த்துப் போராடும் போது உலக வல்லரசியங்களை, எதிர்ப்பதும், அவ் வல்லரசியத்தை, வல்லரசுகளை எதிர்த்துப் போராடுவதும் பொதுமையர்களின் புரட்சிகரக் கடமைகளில் ஒன்ருகும். எனவே தமிழகப் பொதுமையர்களாகிய நாம் உலகப் பொதுமைப் போராட்டத்துடன் வல்லரசுகளின் தேசிய ஒடுக்கு முறைகளுக்கு எதிராக, **தேசியம், குடியாட்சி, மக்களின் நல்வாழ்வு** என்னும் மாவோவியக் கோட்பாடுகளின் அடிப்படையில் வல்லரசு எதிர்ப்பு தமிழகப் புதிய குடியாட்சிப் புரட்சியினை இணைத்துத் **தமிழகத் தனிநாட்டு-உரிமைக்கான** தமிழக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய வல்லரசை எதிர்த்துப் போராடும் போது, தில்லி நடுவண் அரசுக்கு எதிராக எழும் தேசிய இன மக்களின் போராட்டங்களோடும் தமிழகப் பொதுமை இயக்கம் இணைந்து ஒரே நேரத்தில் தமிழகத் தனிநாட்டுரிமைக்காகவும், முற்போக்குத் தன்மை கொண்ட உலக வல்லரசியங்களை எதிர்த்த — இந்தியாவில் வாழும் தேசிய இனங்களின் - கூட்டரசுக்காகவும் போராட வேண்டும். அதே போல் உலக அரங்கில் இந்தியப் பகுதியில் இந்திய வல்லரசுக் கெதிராக எழும் போராட்டங்களோடும் ஒன்றிணைய வேண்டும். அவ் வகையில் இன்று ஈழத்தமிழ் மக்கள் இந்திய வல்லரசிற்கு எதிராகப் போராடி வருவதுடன் தமிழகப் பொதுமை இயக்கம் இணைந்து தமிழக விடுதலைப் போராட்டத்திற்காகக் கருவிப் போராட்டத்தை முன்னெடுப்பதே சரியான கடமையாகும். (தொடரும்)

அவன்தான் தமிழன்.

பாவலர் தமிழ்க்குமரன், ஈரோடு.

அவன்தான் தமிழன் — அட
அவன்தான் தமிழன்.
எவரெவ ரோவந் தெம்மை யாள
இடந்தர மாட்டோம் என்பவன் எவனோ
(அவன் தான்)

தன்பெண்டு தன்பிள்ளை தன்குடும்பம் [என்னும்
தன்னலத்தை விட்டொழித்துத் தமிழ் [நலத்தைப் பேணி
தன்மான வீறுகொண்டு தமிழ்நாட்டை [மீட்கத்
தன்னுடல், பொருள், உயிர்தருபவன் [எவனோ
(அவன் தான்)

பதவி யெனும்எலும் புத்துண் டுக்காய்ப்
பல்லிளித் தடிமை செய்தி டாமல்
மதர்த்தெ ழுந்துதன் மானக் கவரியாய்
மண்ணை மீட்க விரைபவன் எவனோ
(அவன் தான்)

காசுக் காக மலந்தின் னுமல்
களச்சூ ளுரைத்துப் புலிப்போத் தாகத்
தூசு பகையெனத் தோள்தட்டி எழுந்தித்
தொல்தமிழ் நாட்டை மீட்பவன் எவனோ
(அவன் தான்)

பறிக்கப் பட்ட உரிமைகள் மீட்கப்
பாய்புலி யாகக் களம்பு குந்து
முறித்துப் பகைவர் குரல்வளை நெறித்து
முத்தமிழ் நாட்டை மீட்பவன் எவனோ
(அவன் தான்)

குட்டக் குட்டக் குனிந்தி டாமல்
கொள்கை மேருவாய் நிமிர்ந்து நின்று
எட்டப்பர் வீடணர் சூழ்ச்சிமு றியடித்து
எந்தமிழ் நாட்டை மீட்பவன் எவனோ
(அவன் தான்)

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேலும் மூவர் சிறை வைப்பு!

குண்டுவெடிப்பு நிகழ்ச்சியையொட்டி, ஏற்கனவே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மதுரைச் சிறையில் வைக்கப்பெற்றுள்ள **பொழிலன், முகிலன், அறிவழகன்** ஆகிய மூவருக்கு மேலும், பல்லடம் அன்பர்களுள் **பாண்டியன், சுப்பிரமணியன், நாராயணன்** ஆகிய மூவரும் கடந்த மாத இறுதி முதல் அச் சட்டத்தின் கீழ்க் கோவைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசு இவ் வகையில் மிகக் கடுமையாகவும், கொடுமையாகவும் நடந்து வருவதை அன்பர்கள் உணரவேண்டும்.

— **செய்தியாளர்.**

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 31

மக்கள் உரிமையை மீட்டெடுக்கும் முயற்சி உணர்வு வயப் பட்டதன்று; அறிவு வயப்பட்டது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 113.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657